# போஸ்டர்

பொன்- குலேந்திரன்

பாதை ஓரச் சுவரினில்
பல்வர்ணப் போஸ்டர் அது
அடுக்கு மொழி வசனங்களில்
அரசு செய்த சாதனைகள் அதில்
பல பேர் நின்று வாசிப்பர் அதை
பொய் எது உண்மை எது
அதை பாhப்;பவர் நமுட்டுச்சிரிப்பு சொல்லும.
நாட்டு மக்கள் தெரிந்த தலைவி
அரியாசனத்தில் வீற்றிருக்கும் வர்ணப் படம்.

பச்சை நிறச் சேலையும்
பார்வையில் ஒரு கம்பீரமும்
காலடியில் மந்திரிகள் சரணமும்
படிப்பால்; கிடைக்காத பட்டங்களும்
கருப்புப்பூனைகளின் பாதுகாப்பும்
இரு சின்ன இலைகளின் சின்னமும்
போஸ்டரில் முக்கிய அம்சங்கள்.

தெரு வோர சொறி நாய்க்கு
அவசரமாய் வந்த சலம்விட
இலக்காயிற்று அந்தப் போஸ்டர்
நாய்க்குத் தெரியுமா தலைவி என்று
அதன் அவசர சேவைக்கு
அதுக்குத் தேவை ஒரு இடம்.
தலைவி மட்டும் நடந்ததை அறிந்தால்
நாய்பிடிகாரன் கூட்டுக்குள்
சொறி நாய்க்கு நிச்சயம் சிறைவாசம்.

எதிர்கட்சியாளன் எண்ணத்தில்

போஸ்டருக்கு தேவை புது அலங்காரம்.
அடுத்தகணம் சாணத்தால்; அலங்கரிப்பு
அது அவன் வெறுப்பின் செயல்பாடு.
தலைவி மட்டும் கண்டிருந்தால்
அவன் உயிர் அங்கில்லை

கட்டாக்காலி மாடொன்றின்
பசி தீர்ப்பது தெருக்குப்பை
வயிற்றுப் பசியுடைய அதன் பார்வையில்
அப்போஸ்டரும் ஒரு குப்பை

இராப் பெய்த மழையால் போஸ்டரில்
இருந்த சாணாகமும் கரைந்து ஓடிட
அதனை ஒட்டிய கோதுமை மாவின்
வாசைனயும் மூக்கைத் துளைக்க
மறுகணம் தலைவியுடன் போஸ்டரும்
அகஸ்தியர் அரக்கனை ஜீரணித்தது போல்
அதன் வயிற்றினுள் சமாதி அப்போஸ்டர்.
மாடறியுமோ தலைவியின் பெருமை?